பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : ஆவணி 21 (5—9—68) வியாழன் ★ வெளியூர் : ஆவணி 22 (6—9—68) வெள்ளி [இதழ் : 70

### ஆசிரியர் தினம்

ஆசிரியர்களின் நலமே நாட்டின் நலம்.

ஆண்டுதோறும் செப்டம்பர் திங்கள் 5-ம் நாளை ஆசிரியர் நாளாகக் கொண்டாடுவது இந்நாட்டு மக்களின் கடமை யாகும்.

இந்நன்னுளில் மக்களனைவரும் மனமுவந்து ஆசிரியர் நல நிதிக்குப் பொருளுதவி வழங்குமாறு வேண்டுகிறோம்.

# டெல்லிக்கு மனோகரன் எச்சரிக்கை

## 'இந்திப் பள்ளிகளைத் தமிழகத்தில் ஏற்படுத்த முடியுமா?'

### 'ஒருமைப்பாட்டுக்கு ஊறு தேட வேண்டாம்'

சென்னை, செப் 5—

"இந்தியாவில் ஒருமைப்பாடு ஏற்பட வேண்டுமானுல், அதற்கு வழி தமிழ் நாட்டில் 360 இந்திப் பள்ளிகளைத் துவக்குவதல்ல; இந்திப் பள்ளிகளைத் துவக்குவதற்குப் போடுகிற உத்தரவு வெறும் உத்தரவாகத்தான் இருக்கப் போகிறதே தவிர, அதனைச் செயல்படுத்துவது என்பது தமிழகத்தில் இயலாத காரியம்.

"மத்திய அரசின் இத்தகைய நடவடிக்கைகள், இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கே மாறுபட்ட விளைவைத்தான் விளைவிக்குமே தவிர, உருப்படியான பலனைத் தரப்போவதில்லை"

என்று, நாடாளுமன்ற உறுப்பினர் கி. மனோகரன் அவர்கள் டெல்லி அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார். சென்னை மணவழகர் மன்றச் சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஆற்றிய சொற்பொழிவில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"தமிழக அரசு இருமொழிக் கொள்கையை நிறைவேற்றி 'இந்திக்கு இங்கே இடமில்லை; தமிழும் ஆங்கிலமும் தான் இங்கே இருக்கும்' என்று அறிவித்தது.

"ஆனுல் தமிழக அரசின் இருமொழித் திட்டத்தைப் பற்றி ஆலோசிக்கத் தமிழக முதலமைச்சர் அண்ணு அவர்களை, இந்தியத் தலைமையமைச்சர் அழைத்துப் பேசியதுண்டா? உள்துறை அமைச்சரோ, கல்வி அமைச்சரோ விவாதித்ததுண்டா? -- இல்லை.

"தமிழகத்தைப் பொறுத்த மட்டில் 'என்.சி.சி. கட்டளைச் சொற்களை இந்தியிலிருந்து மாற்றித் தமிழிலோ ஆங்கிலத்திலோ இருக்க வேண்டும்' என்று அறிவித்ததே-- இதுவரை மத்திய அரசிடமிருந்து ஏதாவது பதிலுண்டா?

"அவர்களிடமிருந்து பதில் கிடைக்கவில்லையே தவிர, வேகமாகக் காரியங்களைச் செய்துவருகிறுர்கள்; அதன் அறிகுறிதான் 360 இந்திப் பள்ளிகளைத் தமிழ் நாட்டில் துவங்கத் திட்டமிருப்பது!

"இங்கே இந்திப் பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடங்கள் கிடைத்தால்—கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் கிடைத்தால்—படிப்பதற்கு மாணவர்கள் கிடைத்தால் ஆரம்பிக்கப்படும்-

"இந்திப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படுவது, குசராத் மாநிலத்திலோ, மாராட்டியத்திலோ அல்ல; தமிழ்நாட்டில் அமைக்கப்படுகின்றன. இந்த ஏற்பாட்டை இந்திரா காந்தி விரும்புகிருரா?

"சக்தி வாய்ந்த இந்தியா உருவாக்கப்பட வேண்டுமானுல்—ஒருமைப்பாடு சிறந்த முறையில் ஏற்பட வேண்டுமானுல்—இதயங்கள் ஒன்றையொன்று பின்னிப்பிணைந்து செல்ல வேண்டும்; அதற்கு மாருக இப்படிப்பட்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்படுமானுல், உத்தரவு வந்ததுதான் மிச்சமாகுமே தவிர, 360 பள்ளிக் கூடங்கள் ஏற்படுவது என்பது இயலாது.

"இந்த முடிவை மத்திய அரசு மாற்றினுலன்றி -- இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருந்தாலன்றி—ஒருமைப்பாடு உருவாக முடியாது!"

மேலும் திரு. மனோகரன் அவர்கள், ஒருமைப்பாட்டின் நிலை பற்றி விளக்குகையில் குறிப்பிட்டதாவது :—

"இந்தியாவிலே இருக்கின்ற பிளவு மனப்பான்மை போக்கப்பட வேண்டும். இந்திய ஒருமைப்பாட்டைப் பற்றி யாருக்கும் எந்தவிதக் கருத்து வேற்றுமையும் இல்லை.

ஒருமைப்பாட்டை விளக்குவது ஒரு கட்சிக்கு மட்டுமே சொந்தமானதல்ல; அப்படிப்பட்ட ஒருமைப்பாட்டை உருவாக்க இந்திய அரசு எந்த உருப்படியான முயற்சியிலும் ஈடுபடவில்லை; இப்படிப்பட்ட முயற்சியில் இதுவரையில் ஈடுபடாதது ஏன்? ஈடுபடுவதற்குத் தயக்கம் காட்டுவானேன்?

ஒருமைப்பாடு ஏற்படுவதில் சிற்சில குறைபாடுகள் இருக்கலாம்; ஆனுல் இதயங்கள் ஒன்றுபட வேண்டும்.

ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்ற பண்புள்ள

(4 ம் பக்கம் பார்க்க)

## சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்லாதீர்!

### சனநாயகத்தைக் காப்பதற்குத் தமிழகம் கிளர்ந்தெழும்!

### மத்திய அரசுக்கு எம்.ஜி.ஆர். எச்சரிக்கை

சென்னை, செப். 5—

நேற்று நடைபெற்ற மணவழகர் மன்றச் சிறப்புக் கூட்டத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள், சிறப்புரையாற்றுகையில், மொழிப் பிரச்சினையில் டெல்லி அரசு நடந்துகொள்ளும் விதத்தைக் கண்டித்து எச்சரிக்கை விடுத்தார்; அவர் குறிப்பிட்டதாவது :—

"தமிழ் மக்கள் விருப்பத்துக்கு ஏற்ப இங்கே தமிழும், ஆங்கிலமும் மட்டிலும் போதுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிய பின்னர், மத்திய அரசு அதை மதியாமல், இங்கு 360 இந்தி மொழிப் பள்ளிகளைத் திறக்கப் போவதாகக் கூறுமானுல், அது என்ன விரும்புகிறது --- 'சனநாயகத்தையா அல்லது சர்வாதிகாரத்தையா' என்பது நமக்குப் புரியவேண்டும்.

"செக் நாட்டின்மீது இரஷ்யா படையெடுப்பு நடத்தியதற்கும், காஷ்மீரத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு நடத்தியதற்கும், மத்திய அரசின் இந்த அறிவிப்புக்கும் என்ன வேறுபாடு?

"இதைவிட சனநாயகக் கேலிக்கூத்து ஒன்று இருக்கமுடியுமா? இவவாறு மக்கள் உரிமையை -- சனநாயகத்தை மத்திய அரசு பழித்து அழிக்க முற்படுமானுல், மக்கள் மன்னிக்கமாட்டார்கள்! தங்கள் சனநாயக உரிமையைக்

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## தியாகத்தைக் கேலி செய்யாதீர்!

### மொழிக்காகத் தீக்குளித்தவர்கள் தமிழர்களே!

### இந்தி வெறியர்களுக்கு சி.பி. சிற்றரசு எச்சரிக்கை

சென்னை, செப். 5—

"உலகத்திலுள்ள மக்களின் மொழி இலக்கியம்—கலாச்சாரம் போன்றவற்றை எடுத்துக்கொண்டால், மொழிக்காக உயிரை மாய்த்துக்கொண்டதாக வரலாறே இல்லை -- இங்கேதான் சின்னசாமி, அரங்கநாதன் போன்றவர்கள் தீக்குளித்தார்கள்!

"'தமிழ் மொழி வாழ்க' என்று சொன்ன மாணவர்கள், ஒரு தமிழனுலேயே சுட்டுக் கொல்லப்பட்ட கோர நிகழ்ச்சி இங்கேதான்—பக்தவத்சலம் ஆட்சியில்தான் நடந்திருக்கிறது!

"'ஆங்கிலம் வாழ்க' என்று சொன்ன யாரையும் ஆங்கிலேயர்கள் சுட்டதாக வரலாறு இல்லை!

"தமிழகத்தில் மொழி உணர்ச்சி பாராட்டத்தக்க அளவுக்கு வளர்ந்திருக்கிறது; இங்கே இந்திப் பள்ளிகளை ஆரம்பிக்க அனுமதிப்பது, தமிழுக்காகத் தீக்குளித்துச் செத்தவர்களின் தமிழுணர்ச்சியைக் கேலி செய்வதாகும்"

என்று திரு. சி.பி. சிற்றரசு அவர்கள், நேற்று மணவழகர் மன்றச் சிறப்புக் கூட்டத்தில் பேசுகையில் எச்சரிக்கை விடுத்தார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"மொழிக் கிளர்ச்சி இப்போது மட்டும் நிகழ்வதன்று; 'பைபிள் லத்தீன் மொழியிலே இருப்பதால், படித்துப் புரிந்து கொள்ள முடியவில்லை' என்று பிரெஞ்சு நாட்டு மக்கள் போப்பாண்டவரிடம் கோரிக்கை எழுப்பிய பிறகுதான், லத்தீன் மொழியில் எழுதப்பட்ட பைபிள் உலகத்தின் பிற மொழிகளில் பெயர்த்து எழுதப்பட்டது.

"அயர்லாந்து நாட்டின் விடுதலை வீரன் டிவேலரா, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டிருந்த அயர்லாந்தை மீட்கப் போராடியபோது, ஆங்கிலேயர்கள், 'உனக்கு ஐரிஷ் மொழி விடுதலை வேண்டுமா -- அயர்லாந்து நாட்டு விடுதலை வேண்டுமா? ஐரிஷ் மொழி விடுதலை வேண்டுமானுல், அயர்லாந்து ஆங்கிலேயருக்கு அடிமையாக வேண்டும்; அயர்லாந்து விடுதலை பெற வேண்டுமானுல் ஆங்கிலத்தை அயர்லாந்து மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்' என்று கூறியபோது, 'எனக்கு ஐரிஷ் மொழியின் விடுதலைதான் வேண்டும்' என்ருன் டிவேலரா"

# சுதந்தரத்துக்குப் பின் கண்ட சுகம் என்ன?

# சட்டம் இயற்றியும் பயன் கிட்டவில்லையே!

## தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமையற்ற நிலை நீடிப்பதா?

நாடாளுமன்ற மக்களவையில்

### கழக உறுப்பினர் மாயவன் முழக்கம்

புதுடில்லி, செப். 5—

"சனநாயகபூர்வ அரசியல் சட்டக் கடமைகள் பற்றி இந்த அரசு, கிளிப்பிள்ளைபோல் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறது; ஆனால், அதே அரசாங்கம், இந்த நாட்டின் முதுகெலும்பான ஒதுக்கப்பட்ட வகுப்பினரையும், ஒதுக்கப்பட்ட மலைவாசி மக்களையும் உயர்த்தும் அரசியல் சட்டப்பூர்வமான கடமையில் பரிதாபகரமாகத் தோற்றுவிட்டது!

"நசுக்கப்பட்ட இந்த மக்களின் பொருளாதார நிலை, காந்தியாரால் இவர்களுக்குச் சூட்டப்பட்ட பயங்கரமான 'அரிசன்' என்ற பெயரைப் போன்றே உள்ளது; என்றாலும், அவர்களது துன்பத்தைத் துடைப்பதில் இந்த அரசு இதயசுத்தியோடு பாடுபடுவதாக அறிகுறி ஏதுமில்லை"

இவ்வாறு மக்களவையில், கழக உறுப்பினர் மாயவன் அவர்கள், தாழ்த்தப்பட்டோர் நலன் பேண மத்திய அரசு உத்தேசித்துள்ளது பற்றிய விவாதத்தின்மீது பேசுகையில் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் விளக்கிக் கூறியதாவது:—

சுதந்தரத்துக்குப் பின்னர், ஒதுக்கப்பட்ட பழங்குடியினரின் நலத்தைக் கவனித்துக்கொள்ள அரசாங்கம் தனி ஒரு துறையை உண்டாக்கியது என்றாலும், பிரச்சினையின் விளிம்பைக்கூடத் தொட்டதாகத் தெரியவில்லை!

தீண்டாமைக் களங்கம் இந்த நாட்டிற்கு வெட்கம் தந்து கொண்டு இன்னும் இருக்கிறது!

ஒதுக்கப்பட்ட வகுப்பினருக்கும் ஒதுக்கப்பட்ட மலைவாசிகளுக்கும் தனி ஒரு ஆணையரை வைத்திருக்கிறார்கள்; அவரும் ஒழுங்காக ஆண்டறிக்கைகளைத் தந்து கொண்டிருக்கிறார்; இந்த அவையும் அதை விவாதிக்கிறது; ஆனாலும், ஒரே பரிந்துரைகள் ஆண்டு அடுத்து ஆண்டு திரும்பத் திரும்பச் சொல்லப்படுவதைக் காண்கிறோம். ஏனெனில், அந்த ஆணையரின் அறிக்கையை அவர்கள் மதிப்பது கூட இல்லை,

இருபதாண்டுத் தூக்கத்திற்குப் பின், இப்போது இந்த அரசாங்கம் நமக்குச் சொல்கிறது— 'அவர்களின் நலன்களைக் கவனிக்கத் தனி ஒரு குழு அமைக்கப் போகிறோம்'

நாட்டில் அண்மைக் காலமாக இந்த மக்களிடையே அங்கும் இங்கும் நாம் காண்கின்ற புரட்சி மனப்பான்மையை அடக்கவும், ஏமாற்றவும் செய்யப்படும் வேலையே இது என்று நான் அஞ்சுகிறேன்.

அமைக்கப்படவிருக்கின்ற குழுவும், அறிக்கைகளை மட்டும் தந்துகொண்டே இருந்தால், அதன்மூலம் பெரும் பயன் கிடைக்கும் என நான் எண்ணவில்லை.

எனவே, மத்திய அரசின் ஊழியத் துறைகளில் மேற்படி வகுப்பினருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைச் சோதிக்க அக்குழுவிற்கு அதிகாரம் தரவேண்டும்; அதன் பரிந்துரைகள், அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவனவாக வேண்டும்; அக்குழுவின் தீர்ப்பை அரசாங்கம் மறுக்கக்கூடாது -- ஒதுக்கக்கூடாது; இன்றேல், இது வீண் முயற்சியாகிவிடும்.

இந்த வகுப்பினரின் நலனுக்காக ஏதேனும் கூடுதல் நடவடிக்கைகள் வேண்டுமென இந்தக் குழு யோசனை கூறினால், அதை மத்திய அரசாங்கம் எடுத்தாக வேண்டும். இல்லை -- அறிக்கைகள் தருவதோடு இந்தக் குழு நின்றுவிடப்போகிறது என்றால், 'அப்படி ஒரு குழு ஏன்' என்று அறிய விரும்புகிறேன்.

ஆந்திரம், மத்தியப் பிரதேசம் மற்றும் சில இடங்களில் நாம் அண்மையில் கண்டதுபோல் பகுதிச் சிக்கல்கள் பல உள்ளன. அப்படிப்பட்ட கொடும் நிகழ்ச்சிகள் எதிர்காலத்திலும் நடக்காது என்பதற்கு உத்தரவாதமில்லை.

எனவே, அமைக்கப்படவிருக்கும் குழுவிற்கு இப்படிப்பட்ட சிக்கல்களைக் கவனிக்கும் அதிகாரம் தரப்படவேண்டும். அவசியமானால், பிற்படுத்தப்பட்ட மக்களின் பொருளாதார—சமூக நிலையை ஆங்காங்கே -- அவ்வப்போதே ஆராய்ந்து, நிவாரணங்களைக் கூறவும் அதிகாரம் தரப்பட வேண்டும்.

வெளிநாட்டு மதத் துறையினர், நம்மவரை மதம் மாற்றிவிடக்கூடியதொரு நிலைமை நிலவியபடியே உள்ளது; நம்முடைய மக்களின் அறியாமையும், ஏழ்மையும், தாழ்ந்துகிடக்கும் நிலைமையும் முன்கூட்டியே மாற்றவில்லையென்றால், அப்படிப்பட்டதொரு நெருக்கடி நிலையினை நாம் தடுக்க முடியாது; எனவே, இந்தக் குழுவுக்கு தகுந்த வகையிலான அதிகாரமும் தரப்படுதல் வேண்டும்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு வாழ்க்கையின் வசதி வாய்ப்புக்களுக்கான எல்லா வழிகளும் திறந்து விடப்படாமலே இப்போது உள்ளன; இந்த சமூகத்தினருக்கு கல்விக்காகவும் மற்ற விஷயங்களுக்காகவும், வெளிநாடுகள் செல்வதற்கான வசதிகளைச் செய்து தருவதற்கு அரசு சார்பில் சிரமம் ஒன்றுமிருக்க முடியாது.

வீட்டுமனைகள் அளிக்கும் விஷயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையும், மலைசாதி மக்கள் நிலையும் பெரிதும் அக்கறையோடு கவனிக்கப்பட வேண்டும்.

கிராமப்புறங்களில் இந்த மக்களுக்கு வீட்டு மனைகள் கிடைக்க வேண்டுமானால், குறிப்பிட்ட கிராமத்திலுள்ள உயர் சாதிக்காரர்கள் எனப்படும் நிலக்கிழார்களின் தயவின் மீதே அது நடைபெற வேண்டியுள்ளது!

"தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீட்டு மனை ஒதுக்குவது சம்பந்தப்பட்ட நிதி உதவிகள், மத்திய நிதியிலிருந்தே தரப்படுகிறது" என்று அமைச்சர் செகநாத ராவ் அவர்கள், கிராம வீட்டு மனை சம்பந்தப்பட்ட விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது தெரிவித்தார். இது சரிதானா என்று நான் ஐயப்படுகிறேன்; தோழர் செ. கந்தப்பனும் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், மலைசாதி மக்களுக்காகவும் வீட்டு மனை முதலியவை கிடைக்கும் வகையில் மத்திய அரசே நிதியுதவி அளிக்க வேண்டும்.

இதனைச் சரிவரச் செய்தால் கிராமப்புறத்தில் பெருநிலக்கிழார்களின் தயவின்மீதே தாழ்த்தப்பட்ட மக்கள் வாழவேண்டியுள்ளதொரு மிகப் பெரும் அநீதியை நீக்கமுடியும்.

மருத்துவ வசதிகள் சம்பந்தப்பட்ட வகையிலும், இந்த மக்களுக்கு உரிய சலுகைகள் காட்ட வேண்டும். மருத்துவமனை அனுமதிக்காக இவர்கள் நீண்ட வரிசையில் நெடுநேரம் காத்துக் கிடக்கின்றார்கள். அனுமதி கிடைக்கும முன்னர் இவாகளது வாழ்வே முடிந்துவிடுகிறது!

பல்வேறு அரசு அலுவல்களுக்கான தேர்வுகளில் தாழ்த்தப்பட்ட மலைசாதி மாணவர்களுக்கு குறிப்பிட்ட சதவிகிதத்தில் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன; ஆனால், அவர்களது பதவி உயர்வு சம்பந்தப்பட்டவரையில் இந்தச் சலுகைகள் அளிக்கப்படுவதில்லை. பதவி உயர்வுக்கான ஒதுக்கீட்டுச் சலுகைகளும் இந்த மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும்; இல்லையெனில், இந்த மக்கள் உயர்நிலை அடைய முடியாது.

இவ்வாறு இந்த ஒதுக்கீட்டு சலுகை முறையினை மத்திய அரசு சம்பந்தப்பட்ட எல்லா அலுவல்கள் விஷயத்திலும் செயல்படுத்த வேண்டுமென விரும்புகிறேன்."

# கலைவாணர் பெயரால் கலையரங்கம்

## குற்றாலத்தில் அமைச்சர் கருணாநிதி திறந்தார்

குற்றாலம், செப். 3—

"கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் சிறந்த நடிகராக மட்டுமல்ல — நல்ல அரசியல்வாதியாகவும், தத்துவமேதையாகவும் விளங்கியவராவார்!

"எல்லோருக்கும் உரியவராக — எளியோரிடத்தில் இனியமுறையில் பழகுபவராக — அவர்களின் துன்பம் துடைப்பவராக அவர் வாழ்ந்தார். கடைசிக் காலத்தில்கூட அவர் பிறருக்கு உதவுவதில் மிகுந்த ஆர்வமுடையவராக இருந்தார்"

என்று, பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், இங்கு கலைவாணர் பெயரால் அமைக்கப்பட்டுள்ள கலையரங்கைத் திறந்துவைத்துப் பேசுகையில் விளக்கினார்.

ஒரே நேரத்தில் சுமார் 4000 பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய இக்கலையரங்கத்தை குற்றாலம் நகரியத்தின் சார்பில் பொதுப்பணித் துறையினர் கட்டி முடித்திருக்கின்றனர்.

உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் தலைமையில் நடந்த திறப்பு விழாவில், அமைச்சர் கருணாநிதி அவர்கள் மேலும் பேசியதாவது:—

"கலைவாணரின் உருவச் சிலை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்; அது விரைவில் நிறைவேறும் என்று நம்புகிறேன்.

அதற்கு முன்னதாக, இங்கு அவர் பெயரால் ஒரு கலையரங்கம் அமைவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

எழில் குலுங்கும் இந்தக் குற்றாலத்திற்கும் — கலைவாணருக்கும் மிகுந்த தொடர்பு உண்டு; இங்கிருந்துதான் அவர், பல நல்ல கற்பனைகளை உருவாக்கி -- அவற்றை நல்ல சிந்தனை விருந்தாக்கி நாட்டுமக்களுக்கு அளித்தார்.

இத்தகைய குற்றாலத்தில் அவர் பெயர் நிலைத்து நிற்கக்கூடிய வகையில் அவருடைய நினைவுச் சின்னமாக இந்தக் கலையரங்கம் அமைவது சாலப் பொருத்தமாகும்."

### அமைச்சர் மா. முத்துசாமி

விழாவுக்குத் தலைமை வகித்த அமைச்சர் திரு. முத்துசாமி, அவர்கள் தமது தலைமையுரையில் கலைவாணரின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தார்.

# தென் கிழக்கு ஆசியாவிலேயே சிறந்த மேம்பாலம்

## நெல்லை நகர மக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேறுகிறது

### அடிக்கல் நாட்டிய அமைச்சர் கருணாநிதி பெருமிதம்

நெல்லை, செப். 4—

நெல்லைச் சந்திப்புக்கு அருகில் உள்ள இரயில்வே குறுக்குச் சாலை நாள்தோறும் மலமுறை மூடி -- திறக்கப்படுவதால் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறுகள் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்ப்பதற்காக அந்த இடத்தில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கு ரூ. 40 இலட்சம் செலவாகும்.

இந்த மேம்பாலம், நவீன முறையில் அமைக்கப்படும்; 24 அடி அகலத்தில் ஓரடுக்கும் 20 அடி அகலத்தில் மற்றொரு அடுக்குமாக —இரண்டடுக்குப் பாலமாக இந்த மேம்பாலம் அமைக்கப்படும்.

நெல்லை நகர மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான இந்த மேம்பாலத்திற்குப் பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் அடிக்கல் நாட்டிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஒன்றரை ஆண்டுக் காலத்திற்குள் இந்த மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டுவிடும். தென் கிழக்கு ஆசியாவிலேயே சிறந்த பாலமாக இது அமையும்.

இந்தப் புதிய மேம்பாலம், ஒரு சிலருக்குப் பாதகமாக இருந்தாலும் மிகப் பெரும்பாலோருக்கு மிகுந்த பயனளிக்கக்கூடியதாகும்.

இந்தப் பாலம் இல்லாத காரணத்தால் தொல்லைகளுக்குள்ளான மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, இந்தப் புதிய மேம்பாலம் கட்டப்படுகின்றது.

இந்தப் பாலம் இல்லாத காரணத்தால், அரசாங்கத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ. 54 இலட்சம் இழப்பு ஏற்படுகிறது; அதைத் தவிர்க்க அரசாங்கம் ஒரே தடவையில் ரூ. 40 இலட்சம் செலவிட்டு இப்பாலத்தைக் கட்ட முற்பட்டிருக்கிறது.

மேம்பாலம் இல்லாத காரணத்தால், பல இடையூறுகள் மக்களுக்கு ஏற்படுகின்றன; இரயில்வே பாதைக்கதவுகள் இடையிடையே மூடப்படுவதால், நோயாளிகளைக்கூட அவசரமாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல இயலாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. குறித்த நேரத்தில் நோயாளிகளை டாக்டரிடமோ, மருத்துவமனைக்கோ அழைத்துச் செல்லாவிட்டால், நிலைமை என்ன ஆகும்? ஆகவே, இப்படிப்பட்ட இடங்களில் மேம்பாலங்கள் இன்றியமையாதது என்பதில் சந்தேகமில்லை."

### சீரணிச் சிறப்பு மலர்

பின்னர் அமைச்சர் கருணாநிதி அவர்கள், நெல்லை மாவட்டச் சீரணியின் சிறப்பு மலரை வெளியிட்டுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சீரணி தொடங்கப்பட்டபோது, சிலர் அதை, 'செங்காவலர் படை' எனக் கூறினர்; ஆனால் சீரணியினர், மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்திருக்கின்றனர். ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்றவர்களும் பாராட்டும் அளவுக்குச் சீரணியினர், சிறப்புமிக்கப் பணிகளை ஆற்றி வருவது, பெருமைக்குரிய ஒன்றாகும்."

# வேகம் அதிகம்— ஆனால் விபத்துக்கு இடமில்லை!

## இரயில்வேத் துறையில் மாபெரும் சாதனை

இது ஒரு அவசர யுகம்! 'எதிலும் வேகம் வேண்டும்' என்ற கருத்து எங்குமே நிலவுகிறது!

வேகம் மட்டும் இருந்தால் போதுமா? விபத்தில்லாமல் பத்திரமாகப் போய்ச் சேர வேண்டாமா?

வேகமாகவும் அதேசமயத்தில் ஆபத்து ஏற்படாததுமான நூதன இரயில் வண்டியை ஜெர்மானியார் உருவாக்கியிருக்கின்றனர்.

நாட்டின் பல பாகங்களில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருப்பதால், ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போகவேண்டிய அவசியம் வெகுவாக அதிகரித்துள்ளது.

சில நாட்களுக்குமுன் முற்றிலும் நூதன இரயில் வண்டி பத்திரிகை நிருபர்களுக்கு வெள்ளோட்டமிடப்பட்டு காட்டப்பட்டது. இது மிக வேகமாகச் செல்லக்கூடியது. வேகமாகத் திரும்பும்போது மோட்டார் சைக்கிள் எப்படி திரும்புமோ அப்படித் திரும்புகிறது. சாதாரண இரயில் வண்டிகள் போடும் 'கடபுடா' சப்தங்கள் எதையும் இது உண்டாக்குவதில்லை. 'இது, எளிதில் விபத்திற்குள்ளாகாது' என்று பொறியியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

மிக வேகமாகச் செல்லக்கூடிய இரயில்கள் உபயோகத்திற்கு வருவதையொட்டி ஜெர்மன் இரயில்வே மிகவும் திறமையான 'கண்ட்ரோல்' முறைகளைக் கண்டுபிடித்து அவைகளையும் நடைமுறையில் அமுல் நடத்தி வருகிறது. இதனால் எப்பேர்ப்பட்ட விபத்து ஏற்படுவதும் தவிர்க்கப்படுகிறது.

இந்தக் 'கண்ட்ரோல்' சாதனங்கள் மூலம் எவ்வளவு வேகமாகச் செல்லக்கூடிய இரயில் வண்டியையும் நிறுத்த முடியும்.

# 'காச நோய்க் கொடுமையிலிருந்து மனித சமுதாயத்தை விடுவிப்போம்'

## 'வருமுன் காத்து வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்வோம்'

### பெருந்துறை மருத்துவமனை விடுதித் திறப்பு விழாவில் எஸ். ஜே. சாதிக் பாட்சா உரை

ஈரோடு, செப். 4—

"மனித உடல் ஓர் இயந்திரத்தைப் போன்றது ! எப்படிச் சரிவரக் கவனிக்கப்படாத இயந்திரம் பழுதுபடுமோ அதைப்போல், நன்ருகக் கவனிக்கப்படாத உடலும் கெட்டுவிடும். 'சுத்தம் சோறு போடும்' என்பார்கள் ; 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்றும் கூறுவார்கள் ; இருப்பினும், பெரும்பாலோர் இதனை நடைமுறையில் பின்பற்றுவதில்லை. இன்றைக்கு நம்மிடையே உள்ள பிரச்சினைகளில் மிக முக்கியமானவைகளில் ஒன்று, மக்களின் உடல்நலப் பிரச்சினையாகும்.

"சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காத சமுதாயம் பாழ்பட்டுவிடும். ஒருவருக்கு எவ்வளவுதான் செல்வம் இருந்தாலும், உடலில் நலமில்லாவிட்டால் வாழ்க்கையை அனுபவிப்பது என்பது இயலாது.

"இன்றைக்குள்ள வறுமை, பொருளாதாரச் சரிவு ஆகியனவற்றிற்கு நாட்டில் உலவிடும் நோய்களும் காரணமாகும். எனவே, இது குறித்து நாம் மிக்க கவனத்துடன் இருக்க வேண்டும்.

"சமுதாயத்திலிருந்து பிணிப் பேய் என்று அகற்றப்படுகிறதோ, அன்றுதான் சமுதாயத்தில் ஒரு நல்ல மறுமலர்ச்சி ஏற்பட முடியும்"

இவ்வாறு நலத்துறை அமைச்சர் எஸ். ஜே சாதிக் பாட்சா அவர்கள், ஈரோட்டுச்கு அடுத்த பெருந்துறை காசநோய் மருத்துவநிலையத்தில கட்டப்பட்டுள்ள 'பி' வகுப்பு விடுதியைத் திறந்துவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினர். அவர் ஆற்றிய உரையில் மேலும் விளக்கியதாவது :—

"இன்றைக்கு நாட்டில் சுமார் 70 இலட்சம் மக்கள் காச நோயால் அவதிப்படுவதாகவும் அதில் சற்றேறக்குறைய 6 இலட்சம் பேர் தமிழகத்தில் இருப்பதாகவும் வல்லுநர்கள் மதிப்பிட்டிருக்கின்றனர்.

இவ்வியாதியால் ஆண்டுதோறும் 5 இலட்சம் பேர் நாட்டில் மடிவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

காசநோய், க்ஷயநோய், எலும்புருக்கி — என்று பலவாறு அழைக்கப்படும் இந்நோயை, சாதாரண மக்கள், 'டி.பி.' என்ற ஆங்கில உச்சரிப்பு மூலம் எளிதில் அறிந்துகொள்கின்றனர்.

மனிதனின் சக்தி முழுவதையும் நாளடைவில் இக்கொடிய நோய் உருக்கிவிடுவதால், இதை, 'எலும்புருக்கி' என்று அழைக்கிறோம். இத்தகைய கொடிய நோய் சமுதாயத்தில் உலவி வருவது நாட்டிற்கு அபாயமானதாகும்.

இன்றைக்கு இந்த நோயால் பாதிக்சப்படாத குடும்பங்களே இல்லை என்று கூறத்தக்க அளவுக்கு இந்நோய் பரவியுள்ளது ; மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்படும் சவனக்குறைவுகளே இதற்குக் காரணமாகும்.

இந்த நோய் வந்தால், 'மரணம் உறுதி' என்ற நிலை சில ஆண்டுகளுக்கு முன்புவரை இருந்தது ; காசநோயாளியை வெறுத்து ஒதுக்கும் அவல நிலையும் இருந்து வந்தது ; ஆனுல், விஞ்ஞான மறுமலர்ச்சியால் ஏற்பட்ட சாதனைகள் இன்று அத்தகைய நிலைகளை வெகுவாக மாற்றிவிட்டன.

ஆரம்பக் காலத்திலேயே இந்நோய்க்குச் சரியான மருத்துவ முறைகளை மேற்கொள்ளுவதால் இதனை விரைவில் அடியோடு ஒழித்துவிட முடியும். முற்றிய நிலைக்கு வரும் நோய்களைக்கூட நீண்ட -- இடைவிடாத சிகிச்சைகள் மூலம் குணப்படுத்த முடியுமென்ற நிலை உருவாகியிருக்கிறது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள அற்புத மருந்துகளால், சாதாரண மனிதனும் தன் சக்திக்குட்பட்ட நிலையில் தொடர்ந்து பன்னிரண்டு முதல் பதினெட்டு மாதங்கள் வரை சிகிச்சை பெற்றுவந்தால், முழுக்குணம் அடையக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இதையெல்லாம்விட, வருமுன் காப்பதற்குத் தடுப்பு ஊசிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்நோய், 'கொடிய நோய்' என்பது மட்டுமல்ல ; எளிதில் பிறருக்கும் பரவக்கூடியதுமாகும் ; சாதாரண சுவாசத்தின் மூலமே பிறருக்குப் பரவிவிடக்கூடிய பயங்கரத் தன்மை உடையது ; எனவே, இந்த நோயை அசட்டை செய்து வளர்ப்பவர்கள், தங்களையே அழித்துக் கொள்வதல்லாமல் சமுதாயத்திற்கே பெருங்கேடு விளைவிக்கின்றனர் !

இது விரும்பத்தக்கதல்ல ; இதனை ஆரம்பக் காலத்திலேயே ஒவ்வொருவரும் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும்.

அடிக்கடி தொடர்ந்து இருமுதல் -- காய்ச்சல் வருதல் -- உடலின் எடை குறைதல் ஆகியன இந்நோயின் அறிகுறிகள், இதை அறிந்த ஒவ்வொருவரும், உடனே சிகிச்சைகளை மேற்கொள்வதால், இந்நோய் பரவுவதைத் தடுக்கமுடியும்.

இந்நோயைப்பற்றிய குறிப்புக்கள், பண்டைய காலத்திலிருந்தே அறிய வருகிறது. சீனர்கள், யவனர்கள், எகிப்தியர், ரோமானியர் ஆகியவர்களின் குறிப்புக்களில் இந்நோய்பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன ; எனினும், நெடுங்காலமாக இதை, ஆரம்பக் காலத்திலேயே அறிந்து முறியடிப்பதற்கான வழிகளை நாம் காண முடியவில்லை.

1882-ம் ஆண்டில் இராபர்ட் கோச் என்னும் ஜெர்மானியர், இந்நோய்க்கான கிருமிகளைக் கண்டடுந்தார். அதிலிருந்து படிப்படியாக மருத்துவ உலகம், இன்று நோயின் அறிகுறிகளை எளிதில் அறியும் வாய்ப்புகளை ஆராய்ந்து அறிவித்துள்ளது.

மனிதனின் கோழையைப் பரிசோதிப்பதாலும் 'எக்ஸ்ரே' படங்களின்மூலமும் எளிதில் இந்நோயின் தன்மையை உணர்ந்து சிகிச்சையளிக்க இன்று வசதிகள் பெருகியுள்ளன.

இவ்வளவு வசதிகள் பெருகியிருந்தும், இக்கொடிய நோயின் தன்மையை நாம் நீக்க முடியவில்லை.

இன்று நமது அரசினர், உலக சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடனும், அனைத்துலக காச நோய் தடுப்பு நிறுவனத்தின் ஆதரவுடனும் இதனைச் சமுதாயத்திலிருந்து அறவே நீக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர். அவற்றிற்குக் கோவை மாவட்ட காசநோய் மருத்துவமனைக் கழகம் போன்றவை உறுதுணையாக நிற்கின்றன.

இன்றையப் பொருளாதார நிலையில், ஒவ்வொரு காச நோயாளியையும் மருத்துவமனையில் அனுமதித்து அங்கேயே எல்லாச் சிகிச்சையும் அளிப்பதென்ருல், ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 2,500 வீதம் ரூ. 150 கோடி தமிழகத்துக்கு மட்டும் தேவைப்படும்.

ஆனுல், இன்றையச் சூழ்நிலையில் இது இயலாத காரியம். இந்நோய்க்கு வீட்டிலிருந்தே நல்ல சிகிச்சை பெற முடியும். இதற்கு அரசினருக்கும், தனி மனிதருக்கும் ஆகும் செலவுகளும் குறையும்.

இந்த நோயின்போது உயர்ந்த உணவுகளையும், சத்துமிக்க விலையுயர்ந்த பண்டங்களையும் உட்கொள்ள வேண்டுமென பெரும்பாலானவர்கள் நினைக்கின்றனர் ; ஆனுல் எளிய முறையில்--கட்டுப்பாடான சில முறைகளைப் பின்பற்றுவதால், எளிதில் இதைக் கைக்கொள்ள முடியும். இந்த முறைகள் சாதாரண மனிதனின் பொருளாதார நிலைக்கு உட்பட்டதாகும். எனவே, அனைவரும் மருத்துவமனையில்தான் சிகிச்சை பெற வேண்டும் என்ற எண்ணம் வேண்டாம். அறுவை சிகிச்சையும், தீவிரக் கவனமும் செலுத்தப்பட வேண்டிய நோயாளிகள் மட்டும் இத்தகைய மருத்துவமனைகளில் அனுமதி பெறுவது நல்லது. 'நாமும் மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லையே' என்று யாரும் எண்ண வேண்டாம் ; அது தேவையற்றது."


சிசர்ஸ் போட்டியில் சேருங்கள் —

'முகச்சாயலை பார்த்து நட்சத்திரங்களின் பெயர்களைக் கூறும்'

பெறுவீர்

ரூ. 30,000


1

3

முதல் பரிசு ரூ. 19,000
2வது பரிசு ரூ. 8,000
3வது பரிசு ரூ. 3,000

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான்:

இந்த பத்து முகச்சாயல்களும் 10 பிரபல இந்திய திரைப்பட நட்சத்திரங்களினுடையவை. இவர்களில் ஐவர் பம்பாய் திரைப்பட நடிகர்கள். நால்வர் தென்னிந்திய திரைப்படங்களிலும், ஒருவர் கிழக்கு இந்திய திரைப்படங்களிலும் நடிப்பவர்கள். "பெயர்களை இங்கே எழுதுங்கள்" என்று குறிப்பிட்டுள்ள கட்டத்தில், '1'க்கு அடுத்த காலியான இடத்தில் முகச்சாயல் '1' என்று குறிப்பிடப்பட்டுள்ள நட்சத்திரத்தின் பெயரை எழுதுங்கள். (உதாரணம்: முகச்சாயல் '1' 'விமி' என்ற திரைபபட நட்சத்திரத்தினுடையது என்ருல் கட்டத்தில் '1' எண்ணுக்கு அடுத்த காலி இடத்தில் 'விமி' என்று எழுதுங்கள்.) இதே மாதிரி '1' முதல் '10' வரையுள்ள எல்லா காலி இடங்களையும் பூர்த்தி செய்யுங்கள். அவ்விதம் செய்த பிறகு கோரப்படும் இதர விவரங்களையும் எழுதி, 5 (ஐந்து) காலி சிசர்ஸ் பாக்கெட்டுகளையும் அடக்கம் செய்து இந்த அறிவிப்பில் கண்ட முகவரிகளில் ஒன்றுக்கு அனுப்புங்கள்.


2

4

முக்கிய விதிகள்:

இப்போட்டியில் கலந்துகொள்ளும் ஒருவர் எத்தனை விடைகள் அனுப்பியிருந்தாலும் அவர் ஒரு பரிசுக்குமேல் பெறுவதற்குத் தகுதியுடையவராகார்.

சரியான விடை பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

இந்தப் போட்டியில் இந்தியாவில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இந்தியப் பிரஜைகள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

சிகரெட் கடைகளில் கிடைக்கும் விடை அனுப்புவதற்கான பாரங்களில் முழு விதிகளும், நிபந்தனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

5

6

7

8

9


10


முடிவு தேதி செப்டம்பர் 30, 1968




சிசர்ஸ் சிகரெட்டுகள் தயாரிப்பவர்களால் நடத்தப் படுகிறது.

- - - - இங்கே கத்தரிக்கவும் - - - -

இதை விடை அனுப்புவதற்கான பாரமாக பயன்படுத்தவும்
(இங்கு பெயர்களைப் பூர்த்தி செய்யவும்)

| | |
|---|---|
| 1. | 6. |
| 2. | 7. |
| 3. | 8. |
| 4. | 9. |
| 5. | 10. |

விடை அனுப்பும் பாரங்களில் 'சிசர்ஸ் போட்டி' என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அவற்றை இம்பீரியல் டுபாக்கோ கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்டின் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றுக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.

தபால் பை என் 5029 மதராஸ்-1 தபால் பெட்டி என் 12, விசாகப்பட்டினம் 1. தபால் பெட்டி என் 1620 கோயமுத்தூர்-18.

தயவு செய்து பெரிய எழுத்துக்களில் எழுதவும்

பெயர் ..............................

முகவரி ..............................

..............................

..............................

வயது .............. தொழில் ..............................

# தேர்தலே சனநாயகத்துக்கு அச்சாணி

## ஊழல்களைத் தவிர்க்க அனைவரின் ஒத்துழைப்பும் தேவை

### அதிகாரிகள் பொறுப்புணர்ந்து கடமையாற்ற வேண்டும்

### தலைமைத் தேர்தல் ஆணையாளர் வலியுறுத்தல்

உதகை, செப். 5—

"கடந்த 18-ஆண்டுகளாகத் தேர்தல் அதிகாரிகள் தங்களுடைய சாதனைகளைப்பற்றி நினைத்துப் பார்க்கவேண்டும்; குறைபாடுகளை நீக்க வழிவகைகளைக் கூறவேண்டும்.

"வாக்காளர் பட்டியலைத் திருத்துவதும், சரியான பட்டியலைத் தயாரிப்பதிலும் பதிவு அதிகாரிகள் அக்கறை காட்டவில்லை; இதனைத் தமது கீழுள்ள சிப்பந்திகளிடம் ஒப்படைத்து விடுகிறார்கள்; இதனால் இறுதியாக வாக்காளர் பட்டியல் வெளியானதும் பல போலிப் பெயர்கள் புகுந்துவிட்டதாகப் புகார்கள் வருகின்றன; இடம் பெறவேண்டிய பெயர்கள் காணப்படுவதில்லை. ஒரு கிராமத் தொகுதியில் 12,000 புதிய பெயர்கள் சேர்க்கப்பட்டன; அதில் 6,000-முதல் 7,000 பெயர்கள்வரை போலியானவை.

"வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் அதிகாரிமீது பொறுப்புச் சுமத்தப்பட வேண்டும். வாக்காளர் பட்டியலில் அப்பட்டமான தவறு ஏற்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த வேலைக்காக அவ்வப்போது சிப்பந்திகளை நியமிக்கும் வழக்கமும் தவிர்க்கப்பட வேண்டும்.

"ரிடர்னிங் அதிகாரிகளும் தங்கள் சாதனைகளை எண்ணிப் பார்க்கவேண்டும், தேர்தல் வழக்குகளில் உயர் நீதிமன்றமும், தலைமை நீதிமன்றமும் தீர்ப்பளிக்கும்போது அவர்களுக்கு எதிராகச் சில சண்டனக் குறிப்புகளைத் தெரிவித்துள்ளன. அவர்கள் நேர்மையுடனும், நியாயமாகவும் பாரபட்சமற்ற முறையிலும்நடந்துகொள்ளாவிட்டால், பல ஒழுங்கீனங்கள் நடைபெற இடமளிக்கும். மக்கள் சனநாயகத்தில் நம்பிக்கை இழந்து தேர்தல் நடைமுறை முழுவதுமே வெறும் கேலிக்கூத்தாகிவிடும்.

"தேர்தல் சரியாக நடைபெறவில்லையென்றால், அது, சனநாயகத்தில் மக்களுக்குள்ள நம்பிக்கையையே சீர்குலைத்துவிடும் -- தேர்தல் நடைமுறை முழுவதுமே கேலிக்கூத்தாகிவிடும்.

"தேர்தல்களில் ஊழல்கள் இல்லாமல் தடுப்பதற்கு அதிகாரிகள் மட்டுமன்றி, அரசியல் கட்சிகள் -- வேட்பாளர்கள் -- வாக்காளர்கள் அனைவருமே ஒத்துழைக்க வேண்டும்"

என்று, தலைமைத் தேர்தல் ஆணையர் பி. எஸ். சென் வர்மா, தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

## இந்தி வெறியரின் மிரட்டல்!

அம்பாலா, செப். 5—

"இந்தியை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்ட மாநிலங்கள், இந்த ஆண்டு இறுதிக்குள் முழு நிர்வாகத்தையும் இந்தியில் நடத்தவேண்டும்— ஆங்கிலத்தை அடியோடு ஒழிக்கவேண்டும்.

"டிசம்பர் 31-ந் தேதிக்குப் பிறகும் இந்தி பேசும் மாநிலங்களில் ஆங்கிலம் நீடித்தால் அதை எதிர்த்துப் போராட்டம் நடத்துவேன்; இதற்காக ஒரு படை திரட்டுவேன்.

"முழு நிர்வாகத்தையும் இந்தியில் மாற்றாத முதலமைச்சர்களை நாங்கள் 'முற்றுகை' (கேரோ) செய்வோம்"

என்றெல்லாம், பிரபல இந்தி வெறியரும் நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சி உறுப்பினருமான சேத் கோவிந்ததாஸ் அச்சுறுத்தியிருக்கிறார்.

## மாணவர் இலக்கிய மன்றத் தொடக்க விழா

சென்னை — இராயபுரம் சூரிய நாராயண செட்டித் தெருவில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி மாணவர் தமிழ் இலக்கிய மன்றத் தொடக்க விழா, 6—9—68 மாலை 3-30 மணிக்கு நடைபெறும்; உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் மன்றத்தையும், திருவள்ளுவர் படத்தையும் திறந்துவைப்பார்; திரு. மா. வரதப்பர் எம்.சி. தலைமை வகிப்பார்.

## வாக்களிப்பு கட்டாயம்!

### சட்டமியற்ற யோசனை

சென்னை, செப். 5—

"ஒட்டுப் போடுவது உரிமையா அல்லது கடமையா? 'உரிமை' என்றால், அந்த உரிமையைப் பயன்படுத்துமாறு கட்டாயப்படுத்த முடியாது: விருப்பப்பட்டால் அந்த உரிமையைப் பயன்படுத்தலாம்; ஆனால், 'கடமை' என்றால் ஒட்டுப் போடுவதைக் கட்டாயமாக்க வேண்டும்.

"வெளிநாடுகள் பலவற்றில், ஒட்டுப் போடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது; ஒட்டுப் போடாவிட்டால் அங்கு அபராதம் விதிக்கப்படுகிறது.

"நம் நாட்டைப் பொறுத்தவரையில், ஒட்டுப் போடுபவர்களின் எண்ணிக்கை பல ஆண்டுகளாகவே குலைந்துவருகின்றன; கடந்த பல தேர்தல்களில் ஒட்டுச்சாவடிக்கு வந்து ஒட்டுப் போட்டவர்களின் எண்ணிக்கை ஐம்பது சதவிகிதத்திற்கும் குறைவே ஆகும்.

ஒட்டுப் போடுவதைக் கட்டாயமாக்கிடச் சட்டம் இயற்றிட வேண்டும்; அரசியல் சட்டத்தின் 327-வது பிரிவின்படி இவ்விதச் சட்டத்தை இயற்ற நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் உண்டு.

"ஒட்டுப் போடுவதிலுள்ள அக்கறையின்மையைப் போக்கிட, ஒட்டுப் போடாதவர்களுக்கு ஐம்பது ரூபாய் வரையிலும் அபராதம் விதிக்கலாம்."

—தலைமைத் தேர்தல் அதிகாரி
எஸ். பி. சென் வர்மா

## இரண்டு மணி நேரம் கூச்சல் --- குழப்பம்!

### மைசூர் சட்டமன்றத்தில் நடைபெற்ற அமளியின் விளைவு

பெங்களூர், செப். 5—

நேற்று மைசூர் சட்டமன்றக் கூட்டத்தில், சுமார் இரண்டு மணி நேரம் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது.

பல ஒழுங்குப் பிரச்சினைகள் கிளப்பப்பட்டன.

இதன் விளைவாக, மாநிலத்தின் வறட்சி நிலைமைப்பற்றி ன்று நடப்பதாக இருந்த விவாதம் பாதிக்கப்பட்டுவிட்டது.

## மு. தெய்வீகன்

### சுற்றுப்பயணம்

நாடாளுமன்றத் தி.மு.க. உறுப்பினர் மு. தெய்வீகன், நாடாளுமன்றக் குழு அலுவல்களையொட்டிப் பின்வருமாறு சுற்றுப்பயணம் செய்துவிட்டு, செப். 11-ம் நாள் டெல்லி சென்று, கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலைப் பிரச்சினை தொடர்பாக உணவு அமைச்சரைச் சந்திக்கிறார்.

சுற்றுப்பயண விவரம்:— செப். 5: கல்கத்தா; 6: ஹௌரா; 7: துர்க்காப்பூர்; 8: டான டாக்; 9: ராஞ்சி.

## அறிஞர் அண்ணா

### உடல்நிலை

சென்னை, செப். 5—

முதலமைச்சர் அண்ணா அவர்கள் வயிற்றுக் கோளாறு காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருப்பதால், நேற்று காலை 10-30 மணிக்கு சென்னைப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களுக்கு டாக்டர்கள் இரத்தினவேலு சுப்பிரமணியம், சனார்த்தனம் ஆகியோர் சிகிச்சையளித்துவருகின்றனர்.

## என். வி. நடராசன்

### உடல் நிலை

சென்னை, செப். 4—

கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., அவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்பதால், தம் நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்துள்ளார்.

இன்னும் ஒரு வாரத்துக்கு முழு ஓய்வு எடுக்கவேண்டுமென்று அவரைப் பரிசோதித்த டாக்டர் அண்ணாமலை கூறியுள்ளார்.

எனவே, என். வி. என். அவர்கள் இன்னும் ஒருவார காலத்துக்கு எந்த நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ள இயலாத நிலையில் இருப்பதால், இதுவரை ஒப்புக்கொண்டிருந்த நிகழ்ச்சிகளனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன; ஒத்திவைக்கப்பட்ட நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் தேதி அறிவிக்கப்படும்.

## மத்திய அரசுக்கு எம்.ஜி.ஆர். எச்சரிக்கை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

காக்கக் கிளர்ந்தெழுவார்கள்! அன்றும் சனநாயகத்தைக் காத்திடுவதில் தி. மு. கழகம் முன்னணியில் நிற்கும்!

"அறிஞர் அண்ணா அவர்கள் வழிவந்த கழகம், அறிவையே வணங்குகிறது! சர்வாதிகாரத்தை நோக்கி எங்களைத் தள்ளாதிர்கள்! சர்வாதிகாரிகளாக மாறும் அகம்பாவமோ, ஆணவமோ எங்களுக்குக் கிடையாது! எனவே, மத்திய அரசு தன் அராஜகப் போக்கை அகற்றி, சனநாயகத்தைக் காக்கும் என்று நம்புகிறேன்."

## மனோகரன் எச்சரிக்கை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கட்சி --- அதற்காகப் பணியாற்ற வேண்டும்' என்ற முறையில் இயங்கும் பொறுப்பு யாருக்கு இருக்கிறது என்று பார்த்தால, இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகத்திலே இருக்கின்ற தமிழகத்தின் தானைத் தலைவர் அறிஞர் அண்ணாதான் காட்சியளிக்கிறார்!

இந்தியத் துணைக்கண்டத்திலேயே பலம் பொருந்திய ஆட்சி, தமிழகத்திலுள்ள ஆட்சிதான்!

'ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும்; ஒருமைப்பாடு நாட்டில் நிரந்தரமாக்கப்பட வேண்டும்' என்று விரும்புகிற பண்புள்ள ஆட்சி, தி. மு. கழகத்தைத் தவிர வேறில்லை!

தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபை இந்தக் காரியத்தில் ஈடுபடுமானால், தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபைக்கே இடமிருக்குமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இங்குள்ள இந்திப் பிரச்சார சபை உடனடியாக மத்திய அரசாங்கத்துக்குக் கடிதம் அனுப்ப வேண்டும் — 'இருமொழித் திட்டம், தமிழ் மக்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது; இதற்கு எதிராக இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது சரியன்று; இதை நிறைவேற்றக் கூடாது; மக்கள் மனத்தைப் புண்படுத்தக்கூடாது' என்று தெரிவிக்க வேண்டும்.

நாமெல்லாம் அண்ணன் -- தம்பிகளாக இங்கே இருக்க வேண்டியவர்கள்; நம்மிடையே பிளவை உண்டாக்கும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபடுகிறது; அதற்கு நீங்கள் பலியாகிவிட வேண்டாம்.

ஒருமைப்பாட்டுக்கு முக்கியத்துவம் தருவதில் தி.மு. கழகத்திற்குப் பங்குண்டு; ஆனால், இப்படிப்பட்ட காரியங்கள் செய்வது பித்தலாட்டமாகும்."

## புதுவை மாவட்ட தி. மு. க. தேர்தல் இடமாற்றம்

8—9—68 காலை 10 மணிக்கு ஆணையாளர் திரு. நா. தர்மலிங்கம் எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் புதுவை அம்பலத்தாடு ஐயர் மடத்துத் தெரு திருமண மண்டபத்தில் நடைபெறுவதற்குப் பதிலாக,

**புதுவை ஆனந்தரங்கம்பிள்ளைத் தெரு, தலைமை அஞ்சலகம் அருகிலுள்ள முத்தையா மன்றக் கட்டிடத்தில்** நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## குழந்தையைக் காணவில்லை

சென்னை -- வண்ணாரப்பேட்டை சோலையப்பன் தெரு, 85-எண்ணுள்ள இல்லத்தில் வசிக்கும் தர்மலிங்கம் (கழக உறுப்பினர்) அவர்களின் இரண்டு வயது குழந்தை பாஸ்கர் காணவில்லை.

கருப்புப்புள்ளி போட்ட வெள்ளைச் சட்டை போட்டிருப்பான்; சிவப்பு நிறம்; தலையின் பின்புறம் இரண்ட புண்கள் இருக்கும்; சுமாராக நடப்பான்; காணுபவர்கள், மேற்படி முகவரிக்குத் தகவல் கொடுக்குமாறு கேட்டுச்கொள்ளப்படுகிறார்கள்.

தமிழக மின்சார வாரியம்

## டெண்டர் அறிக்கை

சாற்றுக் குறிப்பு எண் சி. 1052

"எண்ணூர் அனல் மின் திட்டம்— சென்னை எண்ணூரிலுள்ள மின் நிலையத் திற்கு குறிப்பு எண் சி. 1052 படி ஒற்றை. இரட்டை, தள்ளு இரும்புக் கதவுகள் வழங்குதல்.

1. 0 கீழே கையொப்பமிட்டவருடைய அலுவலகத்தில் மேலே குறிப்பிட்டுள்ள குறிப்புகளுடன் எண்ணூர் அனல் மின் நிலையத்திற்காக இரும்புக் கதவுகள், தள்ளுக் கதவுகள் வழங்குவதற்கான அரக்கு முத்திரையிட்ட டெண்டர்கள் கீழே கையொப்பமிட்டவரால் 1968-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ஆம் நாள் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

2. 0 வரை படங்கள், அட்டவணைகள் முதலியன கொண்ட சாற்றுக் குறிப்பு எண் சி. 1052 டெண்டர் பிரதிகள் கீழே கையொப்பமிட்டவருடைய அலுவலகத்தில் கிடைக்கும். பிரதிகள் வேண்டுவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 25.75 (75 காசு வரி உள்பட) விதம் விண்ணப்பத்துடன், 'சென்னை வட்ட மின்சார வாரியம் கணக்கு அதிகாரிக்கு (Accounts Officer), 157, மவுண்ட் சாலை, சென்னை-2' செலுத்தியோ அல்லது பணவிடை மூலம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

டெண்டர் பிரதிகளுக்கு கணக்கு அதிகாரிக்கு விண்ணப்பம் செய்யும்பொழுது சாற்றுக் குறிப்பு எண் சி. 1052 என்பதை சரியாகக் குறிப்பிட வேண்டும். இத்தொகையானது எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது. மேலும் இந்த டெண்டர் பிரதிகள் மாற்றுதல் செல்லாது.

3: 0 குறித்த காலத்திற்குப்பின் வரும் டெண்டர் பிரதிகள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4. 0 இவ்வாரியத்திற்கு எந்த டெண்டர்களையோ அல்லது எல்லா டெண்டர்களையோ காரணம் தெரிவிக்காமல் நிராகரிக்க முழு உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்,
தொழில் நுட்பம் (பொதுவியல்)
தற்காலிகப் பொறுப்பாளர்
157, மவுண்ட் சாலை, சென்னை-2
தந்தி: 'CIVITEC'

## தோவாளை வட்ட தி.மு.க. தேர்தல்

குமரி மாவட்டம் தோவாளை வட்டக் கழகத்தின் அவைத் தலைவர் தவிர மற்ற எல்லாப் பொறுப்புகளுக்கும் 7-9-68 சனிக்கிழமை காலை 9 மணிக்கு பூதப்பாண்டி பயணிகள் விடுதியில் முன்னாள் மேயர் திரு. அப்துல் காதர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## விளவங்கோடு வட்ட தி. மு. க. தேர்தல்

குமரி மாவட்டம் விளவங்கோடு வட்டத்தில் மாவட்டப் பிரதிநிதி ஒருவருக்கான தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதற்குப் பதிலாக அங்கு மாவட்டப் பிரதிநிதிகள் மூன்று பேருக்கான தேர்தல் நடைபெறும் என்று இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தேர்தல், 7—9—68 மாலை 5 மணிக்கு குழித்துறை பயணிகள் விடுதியில், முன்னாள் மேயர் திரு. எம். எஸ். அப்துல் காதர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## குளச்சல் நகர தி.மு.க. தேர்தல்

குமரி மாவட்டம் குளச்சல் நகர தி. மு. க. தேர்தல் 7—9—68 காலை 10-மணிக்கு குளச்சல் நகர பயணிகள் விடுதியில், ஆணையாளர் என். கோபால கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

திராவிட முன்னேற்ற கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-18) [illegible]